மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 66/2020, EP No.8/2025</u>

2025 ம் ஆண்டு நவம்பர் 12 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிச்சாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>12.11.2025 மா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த மனுவில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் பணத்தை வசூல் செய்து கொடுக்கும்படி கேட்டுள்ளேன். எதிர்மனுதாரர் பஞ்சாயத்து போர்டில் செகரட்டரியாக பணிபுரிந்து வருவதாக சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் என்ன சம்பளம் வாங்குகிறார் என்றால் ரூபாய்.40,000/-ல் இருந்து 70,000/- வரை சம்பளம் வாங்குகிறார். எதிர்மனுதாரர் வாங்கும் சம்பளத்தை வசூல் செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பஞ்சாயத்து போர்டில் பணிபுரிந்து மாதம் 40,000/- முதல் 70,000/- வரை சம்பளம் வாங்குவதாக நான் சொல்லியுள்ள நிலையில் எதிர்மனுதாரரை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று இந்த மனுவில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது

அல்ல என்றால் சரியல்ல.  நான் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது தள்ளுபடியாகதக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.12 18:53:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்